DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 7/2021 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| Name | : | திரு. லிங்கத்துரை |
| Father's Name | : | நல்லு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 59/2026 |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பள்ளத்தூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பள்ளத்தூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக ஏற்கனவே பணிபுரிந்த திருமதி. போதுமணி என்பவருடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் திருமதி. போதுமணி என்பவர் 23.09.2018ம் தேதி 16.00 மணியளவில் பள்ளத்தூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கோட்டையூர் டெலிபோன் காலனியைச் சேர்ந்த செல்வராஜ் என்பவரின் மனைவி உமாமகேஸ்வரி என்பவல்நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று

பள்ளத்தூர் காவல்நிலைய குற்ற எண்.156/2018 இதச பிரிவுகள் 451, 354(A), 506(1) and sec 4 of TNPHW Act ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

2. அவர் பெற்ற **புகார் மனு அ.த.சா.ஆ.2** ஆகும். அவர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு சார்பு ஆய்வாளர் போதுமணி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 17.00 மணியளவில் வாதியின் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் குமார், மாலதி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4** ஆகும். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5**ஆகும். பின்பு இவ்வழக்கின் சாட்சிகளான புகார்தாரர் உமாமகேஸ்வரி மற்றும் சாட்சிகள் மோகன், அமுதராணி, முருகானந்தம், சுரேஷ் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளையும் விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கு சம்மந்தமான எதிரியை தேடி வரும்போது 23.09.2018ம் தேதி 18.30 மணியளவில் கோட்டையூர் ஸ்ரீராம் நகர், வசந்தமாளிகை அருகே நின்றுகொண்டிருந்த எதிரி முத்துக்குமார் என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. இத்துடன் சார்பு ஆய்வாளர் போதுமணி வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது அன்றைய தினமே இதச பிரிவுகள் 451, 354(A), 506(1) and sec 4 of TNPHW Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 உமாமகேஸ்வரி என்பவர் சார்பு ஆய்வாளர் விசாரணையின்போது தனது புகார்மனுவிலும் எதிரி தன்னிடம் தகாத முறையில் நடந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர பரிசிலனை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல, சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள

WEB COPY

சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இவ்வழக்கின் புகாரர்தராரருக்கு ஆதரவாக எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சிகளையோ, முதல் தகவல் அறிக்கையோ, குற்ற அறிக்கையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

**/ஒம்./ சு.மோகன ரம்யா,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY